செய்தி வெளியீடு எண்:73 நாள்:15.05.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழகத்தில், கொரோனா பரவலைத் தடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள சில தவிர்க்க இயலாத கட்டுப்பாடுகளால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மக்களைப் பாதுகாத்து, ஆறுதல் அளிக்கும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் முதல் தவணை கொரோனா நிவாரண உதவியாக ரூ.2000/- வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.05.2021 அன்று முதல் தவணை நிவாரணத் தொகை ரூ.2000/– வழங்குவதற்கான பணி தொடங்கிவைக்கப்பட்டது.

அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் முதல் தவணை கொரோனா நிவாரண உதவித் தொகை ரூ.2000/-ஐ 15.05.2021 அன்று முதல் நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்கிட குடும்ப அட்டைதாரர்களுக்கு டோக்கன்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், தமிழகத்தில் மேலும் கொரோனா பரவலை தடுக்கும் நோக்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், வரும்

16.05.2021 மற்றும் 23.05.2021 ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் முழு ஊரடங்கு அமல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஏற்கனவே 16.05.2021 அன்றும் முதல் தவணை கொரோனா நிவாரணத் தொகை ரூ.2000/- வழங்குவதற்கு குடும்ப அட்டைதாரர்களுக்கு டோக்கன்கள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி 16.05.2021 அன்று நிவாரண உதவி பெறுவதற்கு டோக்கன்கள் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்கள் மட்டும், கொரோனா நிவாரணத் தொகை ரூ.2000/–த்தினை 16.05.2021 அன்று காலை 8.00 மணி முதல் பகல் 12.00 பணி வரை பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், நியாயவிலைக் கடைகளில் நிவாரணத் தொகை வழங்கப்படும் பொழுது, முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியினை தவறாமல் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**